www.tamilarangam.net

# பண்ணைப் பாலத்தில் மரணப் பொறி! பாதுகாப்பு வலயம் ஓர் படுகொலைத் திட்டம்!!

**தொழிலாளர்களே! விவசாயிகளே!! மாணவர்களே!!!**

**பரந்துபட்ட பொதுமக்களே கிளர்ந்தெழுங்கள்!**
**அரசின் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயசட்டம் அப்பாவி மக்களின் உயிர் குடிக்கும்திட்டம்!**

பாதுகாப்பு வலயம் அப்பாவி மக்களின் உயிர்குடிக்கும் ஓர் மரணப்பொறியாகும். இந்தச்சட்ட மூலம் பாதுகாப்புப்படையென்ற பெயரில் உலாவும் படுகொலைப்படைக்கு அதிபயங்கர பீரங்கி ஆயுதங்களை பொதுமக்களுக்கு எதிராக பாவிக்கும் அனுமதியை வழங்குகிறது. இதன்மூலம் ஏற்படும் விளைவுகள் பயங்கரமானதாக இருக்கும். இது எமது மக்களின் அன்றாட உயிர் வாழ்வுக்கான அனைத்து வழிகளையும் அடைத்து விடுகிற இன்னொரு வகைத்திட்டமாகும்.

உலக வரலாற்றில் ஓர் உள்நாட்டு யுத்தத்தில் 'கனன்' எனப்படும் பீரங்கிகள் பாவிக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். இத்தகைய பயங்கர ஆயுதங்களை பொதுமக்களுக்கு எதிராகப் பாவிப்பது சர்வதேச சட்டத்திற்கு முரணானதாகும் இன்றைய மிலேச்சத்தனமான பாசிச இனவெறி யூ. என். பி தரகு முதலாளிய அரசு தமிழீழ மக்களை ஒடுக்குகிற தனது செயற்பாட்டை இந்நடவடிக்கை மூலம் மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

ஓராண்டுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட கடல் பாதுகாப்பு வலயம் மீனவர்களின் உழைப்பிற்கு உலைவைத்தது. பிறகு ஏற்படுத்தப்பட்ட வீதித்தடைச் சட்டம் போன்றவற்றின் தொடர்ச்சியாகவே இதவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பலாலிமுகாமைச் சுற்றியுள்ள கிராம மக்களின் விவசாயம், தொண்டமானாறு, நாவற்குழி, காரைநகர், யாழ்ப்பாணம் பஸ்நிலைய அருகாமை பிரதம தபால் நிலையம், மத்திய கல்லூரி அனைத்தினது செயற் பாடுகளும், மரணபயத்துடனேயே எந்த நிமிடமும் எமது உயிர் குடிக்கப்படலாம் என்ற அச்சத்தின் மத்தியிலேயே நடைபெற வேண்டியுள்ளது.

தீவுப்பகுதி மக்களைப் பொறுத்தவரை, பண்ணைப்பாலம், அவர் களது உயிர்ப்பலியெடுக்கும் பலிபீடமாக மாற்றப்பட்டுள்ளது' தீவுப்பகுதி மக்களின் அன்றாட வாழ்வுத் தேவைக்கு மரணபய மூட்டும் விதத்தில் அமைந்துள்ளது! கோட்டை முகாமிலுள்ள கொலைவெறி இராணுவம் அண்மைக் காலத்துள் ஏழுபேரை பண் ணைப் பாலத்தில் பலியெடுத்துள்ளது!

தொழிலாளர்களே, விவசாயிகளே! மாணவர்களே! பரந்துபட்ட வெகுசனங்களே கிளர்ந்தெழுங்கள். இந்த கொலை வெறித் தடைச்சட்டத்தை அகற்ற, அணிதிரண்டு போராடு வோம். எமது உரிமைகளை நாமே, நாம் மட்டுமே வென்றெடுக்க முடியும் எமக்காக எவரும் பெற்றுத்தந்துவிட முடியாது! தமி ழீழ விடுதலைக் கூட்டணியினரின் தந்தியோ இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியோ அல்ல; நாமே, நாம் மட்டுமே எமது உரிமை களைப் பெற்றெடுக்க முடியும்.

உதவி அரசாங்க அதிபர்களே! அரசாங்க அதிபரே! அரச சேவையாளர்களே!

அரசின் இந்த பாசிச சட்டத்தை நிறுத்த நிர்ப்பந்தி யுங்கள்!

பாட்டாளி வர்க்க தலைமை ஓங்குக!

வெல்க தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு!!

புதிய ஜனநாயக மாணவர் சங்கம்
(N. D. S. U.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்